1992 மார்ச் 31]

போய் மக்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் அந்த ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக தேவையான இடத்தை மக்கள் அரசுக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்த நிதி ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 ஊரும் சேர்ந்திருக்கிற அகஸ்தீஸ்வரம் என்ற ஊராட்சி ஒன்றியம் ஏறத்தாழ 1 லட்சத்து 26 ஆயிரத்து 800 ஜனத்தொகை கொண்டதாகும். அரசினுடைய கொள்கைப்படி 30 ஆயிரம்பேர் இருக்கக்கூடிய ஒரு ஊருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் ஒரு நிலை வைத்திருக்கிறோம். அங்கு ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிற காரணத்தால் அதிகமாக தேவையில்லை, இது போதும் என்ற வகையிலேதான் இந்த இடத்திலே நான் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. நிதிநிலைமையையும் மனதிலே வைத்து கொண்டு இந்த ஆண்டு இந்த இரண்டையும் எடுத்துக் கொள்ள வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 405. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

405—

அரசுக்குச் சொந்தமான கப்பல்கள்.

*7482— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமாக கப்பல்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், கப்பல்கள் லாபத்தில் இயங்குகின்றனவா அல்லது நஷ்டத்தில் இயங்குகின்றனவா?

(இ) புதிதாக கப்பல் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கப்பல்கள் லாபத்தில் இயங்குகின்றன.

(இ) புதிதாக கப்பல் வாங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

[1992 மார்ச் 31

முற்பகல் 10-10

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கப்பல்கள் யாவும் லாபத்தில் இயங்குவதாகச் சொன்னார்கள். மொத்தம் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன? அதே நேரத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் கப்பல் பேர ஊழல் என்றெல்லாம் இங்கே செய்திகள் நான் பார்த்தேன். படித்தேன். அதுகுறித்து ஏதாவது ஊழல் புகார் இருக்கிறதா? இருந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு லாபத்தில் ஓடுகிறது என்று கேட்டார்கள். 1989-90ல் ரூ. 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் லாபம் ஈட்டியது. 1990-91ல் ஒப்பற்ற தலைவியான தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ரூ. 7 கோடியே 86 இலட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அங்கே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்தில் இருக்கும் கப்பல்கள் எல்லாம் கார்கோ என்று சொல்லப்படுகின்ற சரக்குக் கப்பல்கள் தானா? அவைகளில் எத்தனை நம் இந்தியாவிற்குள்ளே போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கின்றன? எத்தனை கப்பல்கள் வெளி நாட்டுக்குப் போகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திலே 3 கப்பல்கள் இருக்கின்றன. மின் சாரத் துறைக்காக நிலக்கரிகளை ஏற்றி வருவதற்காக கூடுதலாக 7 கப்பல்களை வாடகைக்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே மொத்தமாக 10 கப்பல்களை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். வேறு நாட்டிலேயிருந்து மின் துறைக்காக தூத்துக்குடி, சென்னை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு நிலக்கரியைக் கொண்டு வந்து இறக்குவதற்காக நாங்கள் அந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். புதிதாக கப்பல்கள் வாங்கப்படுமா என்று சகோதரர் மாண்புமிகு சிங்காரம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு இப்போது 3 கப்பல்களைத் தான் வைத்துக்கொண்டிருக்கிறது, பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தில் 7 கப்பல்களை வாடகைக்கு எடுப்பதால், வாடகை நாள்தோறும்

1992 மார்ச் 31]

உயர்ந்து கொண்டிருக்கிற காரணத்தால், இரண்டு கப்பல்கள் 40,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல்களை வாங்குவதற்கும் 65,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல் ஒன்றை-அது தானாக கரிகளை இறக்குவது போன்ற ஆட்டோமேட்டிக் சிஸ்டததுடன கூடிய கப்பல் ஒன்றை—வாங்குவதற்கு அரசின கோப்பு ஆய்வலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 406. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

406—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி.

* 2257—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடித் தொகை 90 நாட்களுக்குள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

தள்ளுபடித் தொகையை துரிதமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டபோதெல்லாம் அதிக நிதி உதவியை ரிபேட்டுக்குக் கொடுத்து எந்த வருடமும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு 1991-92 ஆம் ஆண்டுக்கு 51 கோடி வழங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் 1992-93 ஆம் ஆண்டுக்கு பட்ஜெட்டில் 42 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த மாதிரி நிதி ஒதுக்கீடு கொடுத்தும் குறிப்பாக இந்த நிதி ஒதுக்கீடு மார்ச் கடைசியில் தான் அதிகமாக பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கிறது. இதனால் ஒவ்வொரு பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் வருடத்திற்கு 10 இலட்சத்திற்கு மேல் வட்டியாக பேங்கிற்கு கட்டவேண்டியுள்ளது. ஆகவே தொடர்ந்து

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS